அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

விளம்பி ஆண்டு ஆடி - ஆவணி ஆகஸ்ட் 2018 முரசு 12 ஒலி 134



ஆண்டவனே திருஅம்பலத்தே அருளால் இயற்றும்
தாண்டவனே எனைத் தந்தவனே முற்றுந் தந்தவனே
நீண்டவனே உயிர்க்கெல்லாம் பொதுவினில் நின்றவனே
வேண்ட அனேக வரம் கொடுத்து ஆட்கொண்ட மேலவனே

பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

நினைத்தாலே முக்தி தரும் திருவண்ணாமலையில்...



# பஞ்ச சுத்தி கிரியா

உடல்உறு பிணியால் உயிர்உடல் கெடாவகை
அடல்உறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
– அகவல்

"உடல் நலம், மன அமைதி பெற்று ஆரோக்கிய வாழ்வு வாழ்ந்திட மூன்று நாட்கள்"



**இம்முகாமில்...**

- பஞ்ச சுத்தி முறை
- யோகாசனம்
- பிராணாயாமம்
- மௌனம்
- தியானம்
- பக்தி

**போன்றவை கற்றுத்தரப்படும்.**

நாம் பலபிறவிகளையும் தப்பி மேலான இந்த மனிதப்பிறப்பு எடுத்தது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளைப் பெறுவதற்கே – வள்ளலார்.

செப்டம்பர்
**21, 22, 23**
**2018**

வெள்ளி, சனி & ஞாயிறு

**இடம்: வள்ளலார் சன்மார்க்க சங்கம்,**
வாயு லிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,
**திருவண்ணாமலை.**

## பயிற்சியில் கலந்து கொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1. அன்பர்கள் செப்டம்பர் 20 வியாழன் இரவிற்குள் வந்துவிட வேண்டும்.
2. பயிற்சியில் கலந்து கொள்வோர் 18-60 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
3. யோகாசனம் செய்வதற்கும், படுப்பதற்கும் இரண்டு பெட்ஷீட் மேலும் ஆண்கள்: T.ஷர்ட், ஷார்ட்ஸ் பெண்கள்: சுடிதார் போன்ற ஆடைகளை எடுத்துவரவும். குறிப்பு எடுப்பதற்கு நோட்டு & பேனா, உறங்குவதற்கு ஏர் பில்லோ எடுத்துவரவும்.

**சைவ உணவாளர்களுக்கு மட்டுமே அனுமதி**

**உங்கள் ஆரோக்கியத்திற்கான நன்கொடை ரூ. 1,500/-**

30 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

முன்பதிவிற்கு:
**88385 40176, 89403 96760**





# திருச்செவிக்கு விண்ணப்பம்

## திருஅருட்பா பக்திப் பாமாலை

### திருப்பள்ளி எழுச்சி

*நிலந்தெளிந்தது; கண மழுங்கின; சுவண*
*நீடொளி தோன்றிற்றுக்; கோடோலிக் கின்ற;*
*அலர்ந்தது தாமரை; ஆணவ இருள்போய்*
*அழிந்தது கழிந்தது மாயை; மால் இரவு*
*புலர்ந்தது; தொண்டரோடு அண்டரும் கூடிப்*
*போற்றியோ சிவசிவ போற்றி என்கின்றார்;*
*இலங்குரு வளித்தஎன் அருட்பெருஞ்ஜோதி;*
*என்குருவே பள்ளி எழுந்தருள்வாயே.*

### நெஞ்சுறுத்த திருநேரிசை

*பரிந்துனக்குச் சொல்கின்றேன், பாவங்கள் எல்லாம்*
*எரிந்துவிழ; நாம் கதியில் ஏறத்; தெரிந்து*
*விடையானை; ஒற்றியூர் வித்தகனை; மாதோர்*
*புடையானை; நெஞ்சமே போற்று.*

### திருவருண் முறையீடு

*கடும்புல வேடர்கள் ஓரைவர்; இந்தியக் கள்வரைவர்*
*கொடுங்கர ணத்துட்டர் நால்வர்கள்; வன்மலக் கோளரைவர்*
*அடும்படை கோடி கொண்டுற்றார், மற்றேழையன் யானொருவன்*
*இடும்படை யாது மிலேன்,வெல்வது எங்ஙன் இறையவனே.*

### அருட்பெருஞ்ஜோதி அபயம்

*படித்தஎன் படிப்பும்; கேள்வியும்; இவற்றின்*
*பயனதாம் உணர்ச்சியும்; அடியேன்*
*பிடித்தநல் நிலையும்; உயிரும்; மெய் இன்பும்;*
*பெருமையும்; சிறப்பும்; நான் உண்ணும்*
*வடித்ததெள்ளமுதும்; வயங்குமெய் வாழ்வும்;*
*வாழ்க்கை நன்முதலும்; மன்றகத்தே*
*நடித்த பொன்னடியும்; திருச்சிற்றம்பலத்தே*
*நண்ணிய பொருளும்என்று அறிந்தேன்.*

திருச்சிற்றம்பலம்

# மனமான ஒரு சிறுவன்

ஒருநாள் இரு சோம்பேறிகள் மரத்தடியில் அமர்ந்து ஓய்வெடுத்தனர். புறகாட்சிகள் மிகவும் ரம்யமாகவும், அமைதியுடனும் இருந்தன. ஒரு நீரோடை அவர்களுக்குப் பக்கத்திலேயே ஓடிக் கொண்டிருந்தது. சுகமான தென்றல் வீசி கொண்டிருந்தது.

ஒருவன் மற்றவனிடம் "இந்தக் கணத்தில் ஒருவன் ஐம்பதாயிரம் ரூபாய் பணம் கொடுப்பதாக இருந்தாலும் நான் இந்த இடத்தை விட்டு அவனுடன் செல்ல மாட்டேன்'' என்றான்.

அதற்கு அடுத்தவன், "அவன் உனக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தால்?" என்று கேட்டான். முதலாமவன், "அப்போதும் இல்லை'' என்று பதிலளித்தான்.

அடுத்தவன் அவனை விடுவதாக இல்லை. மேலும் அவனிடம் "ஒரு கோடி ரூபாய் அவன் கொடுப்பதாக இருந்தால்?" என்றான்.

முதலாமவனைப் பதற்றம் பற்றிக் கொண்டது. அவன் உடனே எழுந்து உட்கார்ந்தவாறு "இப்போது கொஞ்சம் யோசிக்க வேண்டியதுதான். நீ கூறியது இருக்கே அதுதான் உண்மையான பணம்! பெரிய தொகை!" என்று கூறி அதைப்பற்றி யோசிக்கத் தொடங்கினான்.

மனம் இதுபோலத்தான் செயலாற்றும். அங்கு பணம் கொடுப்பதற்கு யாருமே இல்லை. இருப்பினும் கற்பனை மற்றும் கனவு. அந்த கனவே ஒரு உண்மையான பணமாக தெரியும்.

**மனம் ஏதோ ஒன்றை கற்பனை செய்கிறது. அதனால், நாம் பதற்றமடைந்து விடுகிறோம். ஒருமுறை நாம் பதற்ற நிலையை அடைந்ததும் மனம் நம்மிடம் பலவற்றை திணித்து விடுகிறது. அப்போது நாம் பரிதாப நிலைக்கு ஆளாகி விடுகிறோம். ஏனென்றால், மனம் நமக்கு ஒரு எண்ணத்தைத் தரும். ஆனால் அதன் பொருளை நமக்குத் தர இயலாது. அதுதான் பிரச்சனையே. அளிப்பதற்கு அதனிடம் எந்தப் பொருளும் கிடையாது.**

மனதின் இயல்பென்பது, இருட்டு அறையில் அங்கு இல்லாத கருப்பு பூனையை ஒரு குருட்டு மனிதன் தேடிக் கொண்டிருப்பதை போலாகும். இதற்கு உதாரணமாக ஒரு கதையைக் காண்போம்.

*ஒரு ஊரில் மேஜீக் பொருட்களுக்கான விற்பனைக் கண்காட்சி நடந்து கொண்டிருந்தது. அப்பொருட்காட்சியை பார்வையிட திரளான மக்கள் வந்திருந்தனர். அங்கு, மிகக் குறைந்த விலைமுதல் மிக அதிகமான விலையுள்ள பலவிதமான மேஜிக் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன. அப்பொருட்காட்சியை பார்வையிட வந்த ஒருவர், அங்கு அழகான சங்கு ஒன்றை பார்த்தார். அந்த சங்கின் விலையை பார்த்து அதிர்ந்து போனார். காரணம், அதன் விலை ஐம்பது லட்சம் ரூபாய் என எழுதப்பட்டிருந்தது.*

*அவர் அந்த கடைக்காரரிடம், "இதற்கு இவ்வளவு விலை சொல்கிறீர்களே, இதன் மகத்துவம் என்ன?" என்று கேட்டார்.*

*அதற்கு கடைக்காரர், "இதனிடம் நீங்கள் எதை கேட்டாலும், அது அதை இரட்டிப்பாக்கும்" என்றார்.*

*ஆச்சரியமடைந்த அவர் அதனிடம், "எனக்கு இரண்டு லட்சம் கொடு" என்று கேட்டார். உடனே அது "ஏன் இரண்டு லட்சம் மட்டும், நான்கு லட்சம் கேள்" என்றது. அதை கேட்டு சந்தோஷமும் வியப்பும் அடைந்த அவர் அந்த பெரிய தொகையைக் கொடுத்து வாங்கிவிட்டார்.*

*பிறகு வீட்டிற்கு சென்று அனைவரும் உறங்கும்வரை காத்திருந்து, சங்குடன் தனி அறைக்கு சென்று அதனிடம், "நான் காலையில் இரண்டு லட்சம் கேட்டேன் இல்லையா, அதை இப்பொழுது கொடு" என்றார்.*

*உடனே அது, "ஏன் இரண்டு லட்சம் மட்டும் நான்கு லட்சமாக கேள்" என்றது.*

*அவரும் உற்சாகத்துடன் "சரி, நான்கு லட்சம் கொடு" என்றார். அது உடனே, "ஏன் நான்கு லட்சம் மட்டும் எட்டு லட்சமாக கேள்" என்றது.*

*அவரும் மிகுந்த சந்தோஷத்துடன், "சரி, எட்டு லட்சம் கொடு" என்றார். அது உடனே, "ஏன் எட்டு லட்சம் கேட்கிறாய் பதினாறு லட்சமாக கேள்" என்றது.*

*அவர், "சரி, பதினாறு லட்சத்தை கொடு" என்றார். அது உடனே, "ஏன் பதினாறு லட்சம் கேட்கிறாய் முப்பத்திரண்டு லட்சமாக கேள்" என்றது.*

*அவர் சற்று சலிப்புடன் "சரி, முப்பத்திரண்டு லட்சத்தையாவது கொடு" என்றார். அது உடனே, "ஏன் முப்பத்திரண்டு லட்சம் கேட்கிறாய் அறுபத்துநான்கு லட்சமாக கேள்" என்றது.*

*அவர் இப்போது வெறுப்புடன், “சரி, அறுபத்துநான்கு லட்சத்தையாவது கொடு” என்றார். அது உடனே, “ஏன் அறுபத்து நான்கு லட்சம் நூற்று இருபத்தெட்டு லட்சமாக கேள்” என்றது.*

*அவர் தவிப்புடன் அந்த சங்கைப் பார்த்தார். “இந்த சங்கு நீங்கள் எதைக் கேட்டாலும் இரட்டிப்பாக்கும்” என்று அந்த கடைக்காரரர் கூறியது அப்போதுதான் ஞாபகம் வந்தது. அதாவது, இரட்டிப்பாக்குமே தவிற எதையும் கொடுக்காது.*

*அதைப்போலத்தான் மனம் எப்போதும் நம்மிடம் வருங்கால எண்ணங்களையே விற்று வருகிறது. அது நமக்கு அதை வழங்கப் போவதில்லை. மாயச் சங்கைப் போல் கொடுப்பதாகக் காட்டும் ஆனால் எதையும் கொடுக்காது. ஏனெனில், வருங்காலம் என்பது நிகழாத ஒன்று. அது வரும்போதெல்லாம் அது நிகழ்காலமாகி விடுகிறது. ஆனால், வழங்க வேண்டியதோ நிகழ்காலத்தில்.*

**அம்பரத்தே ஆனந்த வடிவால் என்றும்**
**ஆடுகின்ற மாமணியே அரசே நாயேன்**
**இம்பரத்தம் எனும் உலக நடையில் அந்தோ**
**இடருழந்தேன் பன்னெறியில் எனை இழுத்தே**
**பம்பரத்தின் ஆடியலைப் படுத்தும் இந்தப்**
**பாவிமனம் எனக்கு வயப்படுவதில்லை**
**கொம்பரற்ற இளங்கொடிபோல் தளர்ந்தேன்**
**என்னை குறிக்கொள்ள கருதுதியோ குறித்திடாயோ**

*மேற்கண்ட திருஅருட்பாவில் நம் பெருமானார், “ஞான ஆகாயத்தில் ஆனந்த வடிவோடு ஆடும் மணியே! அரசே! நாய் போன்ற யான் இவ்வுலக நடையில் துன்பம் அடைந்தேன். என்னைப் பல நெறியில் இழுத்துப் பம்பரம்போல் ஆடி அலைக்கும் மனம் என் வயப்படுவதில்லை. கொம்பில்லாத கொடி போன்ற என்னைக் குறிக்கொள்ள கருதுகின்றாயோ இல்லையோ. யான் அதனை அறியேன்” என இறைவனிடம் மன்றாடுகின்றார்.*

*மேலும், மனம் என்பது ஒரு குரங்கைப் போன்றது. எத்தனைக் கிடைத்தாலும் அது திருப்தி அடைவதேயில்லை.*

*ஒருமுறை அலெக்ஸாண்டர், சுவற்றிலுள்ள படத்தை சரியாக பொருத்துவதற்கு முயன்று கொண்டு இருந்தார். அவர் மிகக் குள்ளமாக, ஐந்து அடியே உயரம் இருந்த காரணத்தால் அவரால் அதைப் பற்ற முடியவில்லை. அவருடைய மெய்க்காப்பாளர் ஏழு அடி உயரமிருந்தார். அவர் உடனே அந்தப் படத்தை எடுத்து சரியாக பொருத்தி விட்டார்.*

இதனால், அலெக்ஸாண்டர் மிகவும் மன வேதனைப்பட்டார். அந்த மெய்க்காப்பாளன், "ஐயா! இத்தகைய பணிகளைச் செய்ய விரும்பும்போது நீங்கள் எனக்குச் சொல்லுங்கள். நான் உங்களை விடப் பெரியவன்" என்று சொன்னான்.

அதற்கு அலெக்ஸாண்டர், "பெரியவனா? இல்லை, இல்லை, உயரமாக இருப்பவன் நீ. பெரியவனாக அல்ல, உயரமாக!" என்று கூறினார்.

அன்றிலிருந்து அலெக்ஸாண்டர் தன்னை விட உயர்ந்தவர்களைக் காணும் போதெல்லாம், அவருடைய படை வீரர்களில் பலர் உயரமாக இருந்ததைக் காணும்போதெல்லாம், அவர் அதை அவமதிப்பாக உணர்ந்தார்.

நம்மிடம் முழு உலகமே இருக்கலாம். ஆனால் சாதாரண பிச்சைக்காரன் ஒருவன் நம்மை விட உயரமாக இருந்தால் நம் உலகமே கைதவறி விடுகிறது. நாம் ஒன்றுமற்றவனாகி விடுகிறோம். நாம் ஒரு பேரரசனாகி விடலாம். ஆனால் பிச்சைக்காரன் ஒருவன் நம்மைவிட நன்றாகப் பாடினால் எல்லாமே சிதைந்து விடும். நம்மால் எல்லாவற்றையும், அனைத்துப் பொருட்களையும் நம்முடையதாக்கிக் கொள்ள முடியாது. நம் அதிகாரத்திற்கு உட்பட்டதெல்லாம் நமக்கு மனநிறைவைத் தராது. மனமும் தன் முனைப்பும் எப்பொழுதுமே திருப்தி அடைவதே இல்லை.

ஓட்டைப் பானை என்றுமே நிறைவடைவதில்லை. இதற்கு ஒரே வழி அதை ஆற்றில் மூழ்கடித்துவிட வேண்டும். அப்போது என்றுமே அதில் குறைவு ஏற்படப்போவதில்லை. அதுபோல், நம் மனம் என்பதும் ஒரு ஓட்டைப் பானையைப் போன்றது. அதில் ஒருபோதும் நிறைவு என்பதே காணப்படுவதில்லை. அது நிறைவடைய வேண்டுமாகில் மனத்தை பரம்பொருளாகிய ஆற்றுநீரில் மூழ்கடித்துவிட வேண்டும். நிறைநிலையுடைய பரம்பொருளோடு இம்மனத்தைச் சேர்த்துவிட்டால் அதுவும் நிறைத்தன்மையை அடைந்து அமைதியடையும்.

**பட்டிப் பகட்டின் ஊர்திரிந்து பணமே நிலமே பாவையரே**
**தெட்டிற் கடுத்த பொய்ஒழுக்கச் செயலே என்று திரிந்து உலகில்**
**ஒட்டிக் குதித்துச் சிறுவிளையாட்டு உஞற்றி ஓடும் மனக்குரங்கை**
**கட்டிக் கொடுத்தாய் நின்தனக்குக் கைம்மாறு ஏது கொடுப்பேனே.**

என்ற பாசுரம், இறைவனைச் சார்ந்து வாழ்ந்ததால் கட்டுக்கடங்கா மனக்குரங்கை அடக்கி ஒருநிலைப்படுத்திக் கொடுபார் என்பதை உணர்த்துகிறது. இஃது மனதை அடக்க ஒரு எளிமையான அருமையான தந்திரம்.

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**பெருமையில் பெருமையும் பெருமையில் சிறுமையும் 671**
**அருள்நிலை வகுத்த அருட்பெருஞ்ஜோதி 672**

பெருமையில் பெருமையும் - தூலத்தில் தூலத்தையும், பருமையில் பருமையையும்
பெருமையில் சிறுமையும் - தூலத்தில் சூக்குமத்தையும் பருமையுள் நுண்மையையும்
அருள்நிலை வகுத்த - அருள்நிலையில் வகுத்தருளிய
அருட்பெருஞ்ஜோதி - அருட்பெருஞ்ஜோதி

தூலமாகவும் சூக்குமமாகவும் உள்ள இறைவன் தூலத்தில் சூக்குமமாகவும், சூக்குமத்தில் சூக்குமமாகவும் (அதிசூச்குமமாகவும்) சூக்குமத்தில் தூலமாகவும், தூலத்தில் தூலமாகவும் விளங்கியருள்கிறான். பொருள்களிலும் இவ்வாறே சிறுமையில் சிறுமை, சிறுமையிற் பெருமை, பெருமையிற் பெருமை, பெருமையிற் சிறுமை உண்டு.

இறைவனது தூல சூக்குமங்களை வள்ளற்பெருமான் வியந்து பாடும் திருவருட்பாப் பாடல்கள் இரண்டை இவ்விடத்திற் காண்பது பொருந்தும்.

**மண் அனந்தங் கோடி அளவுடையது; நீர் அதனில்**
**வயங்கிய நூற்றொரு கோடிமேல் அதிகம்; வன்னி**
**எண்ணிய ஆயிரம் அயுதம் கோடியின்மேல் இலக்கம்;**
**எண்பத்து நான்கதின் மேல் அதிகம் வளியொடுவான்;**
**விண்ணளவு மூலமுயிர் மாமாயை குடிலை**
**விந்தளவு சொலமுடியாது இந்தவகை எல்லாம்**
**அண்ணல் அடிச் சிறுநகத்தில் சிற்றகத்தாம் என்றால்**
**அவர் பெருமை எவர் உரைப்பார் அறியாய்நீ தோழி.**

பஞ்சபூதங்களும், அவற்றிற்கு மேலே உள்ள தத்துவங்களும் ஒன்றைவிட ஒன்று எவ்வளவு பெரியது என்பதைக் கூறியருளுகின்றார்.

மண், எண்ணிறந்த கோடி அளவுடையது. நீர், அதைவிட நூற்றொரு (101) கோடிக்கு மேல் அதிகம். நெருப்பு, அதைவிட ஆயிரம் பதினாயிரம் கோடிக்கு மேல். எண்பத்து நான்கு லட்சம் அதிகம் காற்று, ஆகாயம். மூலம், உயிர், சுத்தமாயை, நாதம், விந்து இவற்றின் அளவு சொல்ல முடியாது, ஒன்றை விட ஒன்று அதிகம்.

*இவையெல்லாம் நம் அண்ணலின் அடியின் சிறுநகத்தின் சிறுபகுதியாகும் என்றால் அவர் பெருமை எவர் உரைப்பார்!*

*பெரியதில் பெரிது என்பதற்கு இப்பாடல் எடுத்துக்காட்டு. சிறியதில் சிறிது என்பதைப் பின்வரும் பாடலால் அறியலாம்.*

**சிருட்டி ஒன்று சிற்றுணவில் சிறிது; அதனில் சிறிது**
**சினைத்த கரணக்கரு; அச்சினைக் கருவில் சிறிது**
**வெருட்டிய மான்; அம்மானில் சிறிது மதி; மதியின்**
**மிகச்சிறிது காட்டுகின்ற வியன் சுடர் ஒன்று; அதனில்**
**தெருட்டுகின்ற சத்தி மிகச் சிறிது; அதனில் கோடித்**
**திறத்தினில் ஓர் சிறிதாகும் திருச்சிற்றம் பலத்தே**
**அருட்திறத்தின் நடிக்கின்ற என்னுடைய தலைவர்**
**அருட்பெருமை எவர் உரைப்பார் அறியாய் என் தோழி**

*என்பது திருவடிப்பெருமை 20ஆம் பாடல் (5644) சூக்குமத்தை (சிறுமையை) வியப்பது.*

*உயிரணு, சிற்றணுவினும் சிறியது,*
*அதனினும் சிறியது கரணக்கரு,*
*அதனினும் சிறியது மான் (மூலப்பகுதி)*
*அதினும் சிறியது மதி*
*அதனினும் சிறியது வியன் சுடர்*
*அதனினும் சிறியது அருட்சத்தி*
*அதில் ஒரு கோடி சிறியது சிற்றம்பலம்*

*அதில் நடிக்கும் என் தலைவர் அருட்பெருமை எவர் உரைப்பார்?*

*சிற்றுணவில் தொடங்கி, ஒவ்வொன்றாகச் சிறுத்துக் கொண்டே சென்று சத்தியினும் ஒரு கோடி சிறியதாய் சிவம் பெருமான் திருச்சிற்றம்பலத்தில் நடிக்கிறார்.*

*சிறு+அம்பலம் = சிற்றம்பலம். சிறியது என்பது பொருளன்று, நுண்மையானது, சூக்குமமானது என்பது பொருள்.*

*மீண்டும் மீண்டும் நினைவிற் கொள்ள வேண்டியது, இங்கே சிறுமை என்றது நுண்மையை (சூக்குமத்தை)யும், பெருமை என்றது பருமையை (தூலத்தை)யும் குறிக்கிறது. இவ்விதம் சிறுமையில் சிறுமையாயும், பெருமையில் பெருமையாயும் விளங்குவது அருட்பெருஞ்ஜோதி ஒன்றே.*

# மூத்தோர்சொல் அமிர்தம்

தங்கள் துறையில் உயர்ந்த நிலையை எட்டி ஜொலித்து கொண்டிருக்கும் அந்தக் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் தங்கள் முன்னாள் பேராசிரியரை சந்தித்து பேசிக் கொண்டிருந்தனர். வாழ்க்கையிலும், செய்யும் வேலையிலும் ஏற்படும் மன அழுத்தம் பற்றி பேச்சு திசை திரும்பியது. வாழ்க்கை இயந்திரத் தனமாகவும் அமைதி இன்றியும் மன உளைச்சலைத் தரக் கூடியதாகவும் உள்ளது என ஆதங்கப்பட்டனர்.



திடீரென்று சமையலறைக்கு சென்ற பேராசிரியர் சிறிது நேரம் கழித்து ஒரு பாத்திரத்தில் நிறைய காபி கொண்டுவந்து வைத்தார். கூடவே காபி குடிப்பதற்காக விதவிதமான கோப்பைகளையும் கொண்டு வந்தார். அவற்றில் ‘வெள்ளி, பீங்கான்’ போன்ற விலை உயர்ந்த கோப்பைகள் முதல் ‘கண்ணாடி, பிளாஸ்டிக், காகிதம்’ போன்ற சாதாரண கோப்பைகள் வரை பல வகைகள் இருந்தன.

அனைவரையும் அழைத்து கோப்பைகளை எடுத்துகொண்டு நீங்களே காபியையும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று பேராசிரியர் கூற வந்திருந்தவர்கள் விலை உயர்ந்த கோப்பைகளை முதலில் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். மிக விலை உயர்ந்தவை மற்றும் அழகான கோப்பைகள் எடுக்கப்பட்டுவிட அடுத்து வந்தவர்களுக்கு சாதாரண கோப்பைகளே கிடைத்தன. மிகச் சாதாரண கோப்பைகள் யாராலும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அனைவரும் தங்களுக்கு கிடைத்த கோப்பையில் காபி எடுத்துக் கொண்டனர்.

இப்போது பேராசிரியர் பேசலானார். உங்கள் கைகளில் உள்ள கோப்பைகளை பாருங்கள். உங்களுக்கு மிகச் சிறந்தது வேண்டுமென்று விரும்புகிறீர்கள். கிடைக்காத பட்சத்தில் கிடைத்ததில் சிறந்ததை தேர்ந்தெடுக்கிறீர்கள். அது இயல்புதான் என்றாலும் அவைதான் மன அழுத்தம், ஏமாற்றம் போன்ற பிரச்சனைகளுக்கு காரணம். சிந்தித்துப் பாருங்கள். கோப்பை

எத்தனை விலை உயர்ந்ததாக இருந்தாலும் அவை காபியின் தரத்தை மாற்றப் போவதில்லை. விலை குறைந்ததாக இருந்தாலும் காபியின் சுவை குறைந்து விடப் போவதில்லை. உண்மையில் சொல்லப் போனால் சில கோப்பைகளின் உள்ளே என்ன உள்ளது என்பது கூடத் தெரியாது.

களைத்துப் போய் இருக்கும் நேரத்தில் நம் தேவை காபிதான். ஆனால் நாமோ கோப்பைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறோம்.

அது மட்டுமல்ல. நீங்கள் ஒவ்வொருவரும் அடுத்தவர் கையில் என்ன கோப்பை இருக்கிறது என்பதையும் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். அடுத்தவரிடம் உள்ளது விலை உயர்ந்தது என்றால் நமக்கு அது கிடைக்கவில்லையே என்ற வருத்தமும், அது சாதாரணமானது என்றால் உங்களுக்குக் கிடைத்ததில் மகிழ்ச்சியும் அடைந்திருப்பீர்கள். வாழ்க்கையும் காபி போன்றதுதான். பதவி பணம் அந்தஸ்து போன்றவை கோப்பைகளாகும். அவை வாழ்க்கைக்கு உதவும் வெறும் கருவிகளே. அவைகளே வாழ்க்கை ஆகிவிடாது. கோப்பையின் மீது நாம் செலுத்தும் அதீத கவனத்தால் காபியின் சுவையை நாம் அனுபவிக்கத் தவறி விடுகிறோம். கோப்பையை ஒதுக்கி காபியை பாருங்கள்.

மகிழ்ச்சியாக வாழ்பவர்கள் எல்லாவற்றிலும் சிறந்ததை பெற்றிருப்பதில்லை. தாம் பெற்றிருப்பதை சிறந்ததாகக் கருதுகிறார்கள். அதனால், அவர்களை கவலைகளும் அழுத்தங்களும் அதிகமாக நெருங்குவதில்லை.

“எளிமையாய் வாழுங்கள்! கருணையுடன் பேசுங்கள் எல்லோரையும் நேசியுங்கள்! வாழ்க்கை மகிழ்ச்சியாய் இருக்கும்” என்றார் பேராசிரியர். உண்மைதானே!

---

ஒரு சாது தனது சீடர்களுடன் நதிக்கரைக்கு வந்தார். அப்போது, ஒரு தம்பதியர் கடும் கோபத்துடன் ஒருவரை ஒருவர் நோக்கி கத்திக் கொண்டிருந்தார்கள்.

சாது நின்றார். தனது சீடர்களிடம் “ஏன் அவர்கள் கத்துகிறார்கள் தெரியுமா?” என்று கேட்டார்.

“அவர்கள் நிதானம் இழந்து விட்டார்கள். அதனால் கத்துகிறார்கள்” என்று சீடர்களில் ஒருவன் சொன்னான்.

"ஆனால் அவர்கள் அருகருகே தானே நிற்கிறார்கள்!! ஏன் கத்த வேண்டும்? மெதுவாய் சொல்லலாமே" என்று குரு கேட்டார்.

சீடர்கள் ஏதேதோ பதில்களைச் சொன்னார்கள். ஆனால், எதுவுமே சாதுவுக்கு திருப்திகரமாக இருக்கவில்லை.

கடைசியில் அவரே அதற்கான பதிலைச் சொன்னார். "இருவர் கோபம் கொள்ளும் போது அவர்களுடைய இதயம் தூரமாய்ச் சென்று விடுகிறது. தூரத்தில் இருப்பவர்களுடன் கத்தி தானே பேசவேண்டும். அதனால்தான் கத்துகிறார்கள். அதேபோல இரண்டு பேர் நேசத்தில் இருக்கும்போது ரொம்பவே நெருங்கி வருகிறார்கள். எனவே, அவர்கள் மென்மையாய்ப் பேசினால் போதுமென்றாகி விடுகிறது. இன்னும் நெருங்கி உறவில் இறுக்கமாய் இருக்கும் போது இடைவெளியே இல்லாமல் போய்விடுகிறது. அவர்கள் பேசவே தேவையில்லை. மௌனமே பாஷையாகி அவர்களுக்குள் உலவும்" குரு சொல்லச் சொல்ல சீடர்கள் மௌனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

குரு கடைசியாகச் சொன்னார். "எனவே, விவாதிக்கும் போதோ, சண்டையிடும் போதோ உங்கள் இதயம் தூரமாய்ப் போய்விடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். இதயங்களைத் தூரமாய் அனுப்பி வைக்கும் வார்த்தைகளைப் பேசாதீர்கள். இல்லாவிட்டால் இந்த தூரம் மிக அதிகமாகி திரும்பி இணையும் பாதையையே மறந்துவிடும்."

திருச்சிற்றம்பலம்


## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

அன்பு உள்ளங்களே! கடந்த 11 ஆண்டுகளாக அன்பர்களின் தயவால்தான் நமது மாத இதழ் நடைபெற்று வருகின்றது. ஆனால் பெரும்பாலான அன்பர்கள் நமது மாத இதழுக்கு சந்தா செலுத்தாமலேயே உள்ளனர்.

இருப்பினும் இதுவொரு ஆன்மீக மாத இதழ் என்ற காரணத்தினால் அவர்களுக்கும் தவறாது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். இதை உணர்ந்து அன்பர்கள் நிலுவையிலுள்ள தங்கள் தொகையை தெரிந்துகொண்டு சந்தா தொகையினை செலுத்தி இம்மாத இதழ் தொடர்ந்து நடைபெற உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

சந்தாகால விபரம் பற்றி அறிய புத்தகத்தின் பின் அட்டையில் தங்கள் முகவரியின் கடைசி வரியினை காண்க.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் 8012680865**

## Advertisement


### மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அனுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

திருவருள் துணையுடன்

BNS

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

### Books for All Ages

Wings of Wisdom

| Unlimited Books Starts @ INR 1200/. | |
|---|---|
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

## SOULFUL HOME

### Schemes starts @ INR 2400/=

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



### Key advantages

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

AYYAPPAN THANGAL 26792007 / VALASARAVAKKAM 42105700 / PORUR 42107304 / OMR 42863478 / VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

# வள்ளலாரின் ஒளிவழிபாடும் ஒப்பற்ற பெருஞ்சுகப் பெருவாழ்வும்

இந்த உலகில் உயர்பிறப்பாகிய மனிதப் பிறப்பு எடுத்தும் ஜீவர்களெல்லாம் ஜாதியின் பெயராலும், மதத்தின் பெயராலும் போரிட்டு இறந்து வீண்போவதைக் கண்டு இரக்கம் கொண்ட எல்லாம் வல்ல முழுமுதற் பொருளாகிய நம் அருட்பெருஞ்ஜோதி இறைவன், ஜீவர்களெல்லாம் இனியும் இப்படி வீண்போகாமல் உண்மை உணர்ந்து ஒப்பற்ற பெருஞ்சுகத்தில் வாழ்வதற்காக நம் வள்ளல் பெருமானாருக்கு சுத்த சன்மார்க்கம் என்ற பொது நெறியை; பெருநெறியைக் காட்டி, அதன் பொருளினை உணர்த்தி இப்பூவுலகிற்கு அனுப்பி வைத்தார்.

இம்மார்க்கத்தின் முக்கிய லட்சியம் கடவுள் ஒருவரே. அவர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்பதாம். மேலும், ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள ஜீவர்களாகிய நாம் அனைவரும் சகோதரர்களே என்பதை உணர்த்தும் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை என்பதும் இதன் முக்கிய லட்சியமாகும்.

இறைவனின் படைப்புக்களாகிய ஆருயிர்கள்பால் தயவு வைத்து அவற்றின் துன்பங்களை நீக்கிக்கொண்டும், முழுமுதற் பொருள் ஒளிவடிவமாக உள்ளது என நினைத்தும் வழிபட்டால்தான் நாம் அந்த ஒப்பற்ற பெருந்தயவுடைய பேரறிவாய் விளங்கும் இறைவனின் அருளைப் பெற்று நிகரிலா இன்பத்தில் வாழலாம் என்பதே வள்ளல் பெருமான் நமக்கு உணர்த்தும் பெரிய உண்மை. இதில், ஒளிவழிபாட்டைப் பற்றியே இக்கட்டுரையில் காணவிருக்கிறோம்.

## ஒளிவழிபாட்டுச் சிந்தனைகள்

**“அருகன் ஆவான் அரனுரு அல்லனோ”** என்று திருநாவுக்கரசர் தேவாரத்தில் குறிப்பிடுவதைப் பார்க்கும்போது கதிரவன் வழிபாடும் சைவ சமயத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது என்பது வெளிப்படும்.

**“உலகம் உவப்பவலன் ஏர்பு திரிதரு**

**பலர்புகழ் ஞாயிறு கடல் கண்டாங்கு”** என்று திருமுருகாற்றுப்படை கதிரவனை வருணிக்கிறது.

கதிரவன் தோற்றத்தால் உலகம் இயங்குகிறது என்கிறார் நக்கீரர். ஒளியும் அதற்கு மூலமான கதிரவனும் இல்லையென்றால் மக்கள் உயிர் வாழ முடியாது என்பதை இன்றைய விஞ்ஞானிகள் கூறுவதுபோல் அன்றைய மெய்ஞ்ஞானிகளும் கூறியுள்ளனர்.

*பண்டைய காலத்தில் கார்த்திகை மாதத்தில் ஆலயங்கள், வீடுகளில் நூற்றுக்கணக்கான விளக்குகளை ஏற்றி வழிபட்டார்கள்.*

**"....கார்த்திகைநாள்**
**தளத்தேந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்**
**விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்"**

*என்ற திருஞானசம்பந்தர் தேவாரத்தில், விளக்குகளை வைத்து வழிபடும் பழக்கம் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே மக்களிடம் இருந்து வந்தது என்பதை அறிய முடியும்.*

*எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகப் பெருமான் மூன்று வகையான ஒளி வழிபாட்டுச் சிந்தனைகளை அருளியுள்ளார். ஒளி வழிபாட்டின் வளர்ச்சி நிலையைக் கூறும் போது "சோதியே, சுடரே, சூழொளி விளக்கே" என்று பாடுகின்றார். "சோதி" என்ற சொல் பிரகாசமாக விளங்கும் பேரொளியையும், "சுடர்" என்பது எல்லைக்கு உட்பட்டுப் பற்றுக்கோட்டிற்கு ஏற்ப விளங்குவதையும், "விளக்கு" என்பது மக்கள் வைத்து வழிபடும் நிலையையும் குறிக்கிறது. ஆக, பேரொளி, சுடர், விளக்கு என மூன்று நிலைகள் உள்ளன. இவ்விதம் காணப்படினும் உண்மையில் அவை அனைத்தும் ஒன்றே என்ற கருத்தையே இவர் வலியுறுத்துகிறார்.*

*"ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே" என்ற பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்த திருவிசைப்பாவின் முதற்பாடல் இறைவனை ஒளியாக உருவகித்தமைக்குச் சான்றாகும்.*

*பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய பெரியபுராணம் இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் என்று தொடங்கும் முதல் பாடலில் 'அலகில் சோதியன்' என்று இறைவன் சோதியாகக் காணப்படுகிறான் என்கிறது.*

## திருஅருட்பாவில் அறிவியல் சிந்தனை

*"ஒளியை ஒலியாக மாற்ற முடியும்"* (Light energy can be converted into sound energy) *என்னும் புதியதொரு அறிவியல் கூறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் வளர்ந்ததே இன்றைய பேசும் படம்* (talkies). *இந்த உள்ளீட்டு உண்மையை எளிமையாக "அக்கச்சி" எனும் பாடலில் வள்ளல் பெருமானார்,* **"வானத்தின் மீது மயில் ஆடக்கண்டேன்; மயில் குயில் ஆச்சுதடி"** *என்கிறார்.*

*இங்கு மயில் என்பது ஒளியையும், குயில் என்பது ஒலியையும் குறிக்கும். இஃது பெருதற்கரிய அக அனுபவ உண்மை.*

*ஒளி எல்லா அண்டங்களையும் கடந்து செல்கின்றது என்பதை விஞ்ஞானிகள் எவ்வாறு இன்று கூறுகின்றனரோ அவ்வாறே பெருமானாரின் திருவருட்பா பாடல்களும் அன்றே இவ்வுண்மையைத் தெளிவாகக் காட்டுகின்றது.*

**"ஒளி ஒன்றே அண்டபகிர் அண்டம் எல்லாம் விளங்கி**
**ஓங்குகின்றதன்றி அண்ட பகிரண்டங்களிலும்**
**வெளிநின்ற சராசரத்தும் அகத்தினொடு புறத்தும்**
**விளம்பும் அகப்புறத்தினொடு புறப்புறத்தும் நிறைந்தே**
**உளிநின்ற இருள்நீக்கி இலங்குகின்ற தன்மை**
**உலகறியும் நீஅறியாது அன்றுகண்டாய் தோழி**
**தளிநின்ற ஒளிமயமே வேறிலை எல்லாமும்**
**தான்என வேதாகமங்கள் சாற்றுதல் சத்தியமே"**

*என்ற பாசுரத்தின் வரிகள் இதற்குச் சான்றாகும்.*

## வள்ளல் பெருமானார் பெற்ற ஒளிவடிவப் பேறு

**"கற்றேன் சிற்றம்பலக் கல்வியைக் கற்றுக் கருணைநெறி உற்றேன்**
**எக்காலமும் சாகாமல் ஓங்கும் ஒளி வடிவம் பெற்றேன்**
**உயர்நிலை பெற்றேன் உலகில் பிறநிலையைப் பற்றேன்**
**சிவனாந்தப் பற்றே என் பற்றெனப் பற்றினனே"**

**"ஊன் உடம்பை ஒளிஉடம்பாய் ஓங்கி நிற்க**
**ஞான அமுதெனக்கு நல்கியதே – வானப்**
**பொருட் பெருஞ் சோதிப் பொதுவில் விளங்கும்**
**அருட்பெருஞ் ஜோதி அது"**

*என்ற பாசுரங்களில் வள்ளல் பெருமானார் தாம் பெற்ற பேற்றினை விளக்கியதோடு தமக்கு என்ன வேண்டும் என்று கேட்டாரோ அதை இறைவன் அளித்ததைக் கூறி உலகத்தவரையும் ஜீவகாருண்ய வசத்தராய் அருட்பெருஞ்ஜோதி இறைவனைச் சார்வீர் என அழைக்கிறார்.*

## வள்ளலாரின் ஒளி வழிபாட்டுச் சிறப்பும் வழிபாடு செய்யும் முறையும்

*எல்லாச் சமயங்களும் முழுமுதற்பொருள் ஒளி வடிவானது என்றே கூறின. அப்பொருள் கருணை வடிவானது எனவும் கூறின. இவ்வுண்மையை சமயங்களின் பெயரால் மாறுபட்டுக் கிடக்கும் மனித சமுதாயத்திற்கு உணர்த்தும் வகையில் 'சமரச சுத்த சன்மார்க்கம்' என்ற பெருநெறியை வகுத்தார் நம் வள்ளல் பெருமானார். இம்மார்க்கத்தில் இறைவழிபாட்டு விதியாக தான் வழிபட்ட விளக்கை புறத்தில் வைத்து "இதைத் தடைபடாது*

ஆராதியுங்கள். ஆண்டவர் இப்போது தீப முன்னிலையில் விளங்குகின்றபடியால் உங்களுடைய காலத்தை வீணில் கழிக்காமல் தெய்வபாவனையை இந்த தீபத்தில் செய்யுங்கள்'' என அருளினார். அங்ஙனம் வழிபாடு செய்ய இறைவனது உண்மையை வெளிப்படக் காட்டும்

**“அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி”**

என்ற மகாமந்திர திருவாக்கியத்தை அருளினார். அதாவது, **ஒப்பற்ற பெருந்தயவுடைய பேரறிவு** என்பதே இதன் பொருள். மேலும், நாம் எல்லோரும் சாதி, மத, இன, மொழி என்ற பேதங்களற்று ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன் ஒளிவழிபாடு செய்து நற்கதியடைய வடலூரில் சத்திய ஞானசபையை நிறுவினார்.

இதற்குமுன் தோன்றிய எல்லா சமய மதங்களும் இறைவன் ஒளி வடிவானவன் எனக் கூறினாலும் வள்ளல் பெருமான் கண்ட இறைவன் யாரென நாம் தெரிந்து கொண்டு இவ்வொளி வழிபாட்டில் ஈடுபடுவது சாலச் சிறந்தது.

நம் வள்ளல் பெருமானார் உரைநடைப் பகுதியில் “இப்போது வருகின்ற நமது கடவுள் இதற்கு முன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுளர், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல. இப்படி சொல்லப்பட்ட எல்லா மூர்த்திகளும், எல்லாத் தேவர்களும், எல்லாக் கடவுளரும், எல்லாத் தலைவர்களும், எல்லா யோகிகளும், எல்லா ஞானிகளும் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித்தலைமைப் பெரும்பதி'' என்பார்.

இங்ஙனம் எங்கும் பூரணராகி விளங்குகின்ற உண்மைக் கடவுளிடம் உண்மையான அன்பு கொண்டு நமது குற்றங்களை அவர்தம் திருவடியில் விண்ணப்பித்து, இறைவனது பெருமையை நினைந்து உணர்ந்து கண்ணீர் மல்கி நன்னிதியே; ஞான நடத்தரசே; என்னுரிமை நாயகனே என்று போற்றித் துதித்து வந்தால் நாம் முடிவில்லா இன்பத்தில் திளைப்பது திண்ணம் என சத்தியம் செய்து அழைக்கிறார். இவ்வண்ணம் இறைத் தன்மையை உணர்ந்து சாதனையில் ஈடுபட்டால் முடிவான இன்ப அனுபவம் பெறுவதற்குத் தடையில்லை.

**ஜோதி ஜோதி ஜோதி சுயம்: ஜோதி ஜோதி ஜோதி பரம்**
**ஜோதி ஜோதி ஜோதி அருள்: ஜோதி ஜோதி ஜோதி சிவம்**

# அகங்காரம்

இந்த உலகில் நாம் எந்தவொரு காரியத்தைச் செய்தாலும் அந்த காரியத்தைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தால் அல்ல. மாறாக, பிறரால் நாம் பார்க்கப்பட வேண்டும் என்பதுதான்.

பிறர் நம்மைக் கண்டுகொள்ள வேண்டும், அங்கீகரிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, நம் அகங்காரம் நம்மைப் பல காரியங்களைச் செய்யத் தூண்டும். அந்த நிலையை நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்நாளில் அனுபவித்திருப்போம். அந்த நிலையில், பிறரது கவனத்தை ஈர்த்தால் மட்டுமே நல்லவை நல்லவையாகக் கருதப்படும்; பிறரது கவனத்தை ஈர்க்க முடிந்தால், கெட்டவையும் நல்லவையாகக் கருதப்படும். இதில் வேடிக்கை என்னவென்றால், பிறரது கவனத்தை ஈர்க்கத் தவறினால், நல்லவையும் மோசமானவையாகக் கருதப்படும். பிறரது கவனத்தைப் பெறுவதன் மூலம் அகங்காரம் வாழ்கிறது.

அதன் இயல்பின் காரணமாக அதற்குத் தீனி போட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். அது ஒரு நிரந்தரப் பிச்சைக்காரன். அகங்காரத்தின் பிரச்சனை என்னவென்றால், அதற்குத் தீனி போடப்பட்டவுடன், நீங்கள் உயர்வு மனபான்மையுடன் போராட வேண்டியிருக்கும்; அகங்காரத்தைப் பட்டினி போட்டால், தாழ்வு மனப்பான்மையுடன் துன்புற வேண்டியிருக்கும். எப்படிப் பார்த்தாலும், அது உங்கள் மன அமைதியைப் பறித்துவிடும்.

அகங்காரம் இருக்கும்போது பிற அனைத்தும் நம்மைவிட்டுப் போய்விடும். அகங்காரம் நம்மைவிட்டுப் போகும்போது, மற்ற உயர்ந்த விஷயங்கள் அனைத்தும் வந்து சேரும்.

இவ்வுலகில் அழகான விஷயங்கள் பல இருக்கின்றன. அதில் பல்வேறு விதங்களும் உண்டு. உதாரணமாக இசையும் நடனமும். இவை உடல் சார்ந்த விஷயங்கள். நாம் அவற்றோடு செல்லும்போது அவை அழகானவை, ஆனால் ஒருவர், அதோடு நின்று விடக் கூடாது, அவற்றால் தடைபட்டுவிடக் கூடாது. ஏனெனில், அவை மேலும் உயர்ந்த நிலைக்குச் செல்லும் வாயிலை திறந்துவிடும்.

மேலும், நீங்கள் இசையை நேசித்தால் விரைவில் அது கரைந்து நீங்கள் மௌனத்தில் ஆழ்ந்துவிடுவீர்கள். நீங்கள் நடனத்தில் மிகவும் ஆர்வமாக இருந்தால் விரைவில் நடனம் மறைய வேண்டும்.

அப்போதுதான் நீங்கள் 'நான்' என்கின்ற அகங்காரத்தின் எல்லையைக் கடந்து இருப்பு நிலையின் அசையாத தன்மையினுள் இருக்க முடியும்.

சைனாவில் ஒரு பழமையான கதை ஒன்று உண்டு. ஒருவன் தன்னைத் தானே மிகவும் சிறந்த வில்வீரனாக கூறிக் கொண்டான். அவன் அரசரிடம் சென்று, "நான் யாருடைய சவாலையும் ஏற்கத் தயார். நான் வில்வித்தையை முப்பது வருடங்களாக பயிற்சி செய்து வருகிறேன். இந்த ராஜ்ஜியம் முழுவதிலும் எனக்கு இணையாக போட்டியிடக்கூடிய யாரும் இல்லை என்பது எனக்கு தெரியும். ஆனால், இது அறிவிக்கப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட கால அவகாசம் தரப்படும். அதற்குள் யாராவது என்னுடன் போட்டியிட வந்தால் நான் தயார். அப்படி யாரும் வராவிடில் அல்லது வந்து என்னால் தோற்கடிக்கப்பட்டுவிட்டால், இந்த ராஜ்ஜியத்தின் பிரதான வில்லாளனாக, சிறந்த வில் வித்தையாளனாக என்னை நீங்கள் அறிவிக்க வேண்டும்" என்று கேட்டான்.

அவன் கூறுவது யாவும் உண்மையே, எதுவும் மிகையாக கூறப்பட்டதல்ல என்று அரசருக்குத் தெரியும். அவர் பார்த்ததிலேயே அவனுக்கு நெருக்கமாக வரக்கூடிய அளவில் கூட யாரும் இல்லை. அவன் அந்த கலையை மிகவும் ஆழமாக பயின்றிருந்தான். அரசரிடம் ஒரு வயதான வேலைக்காரன் இருந்தான். அவன் எப்போதும் அரசருடன் இருப்பான்.

இப்போது அரியணையின் கீழே அமர்ந்திருந்த அவன் சிரித்தான். அரசர், "ஏன் சிரிக்கிறாய்? அவன் கூறியது உண்மைதானே. எனக்கு அவனது திறமையைப் பற்றி தெரியும்" என்றார். அதற்கு அந்த வேலைக்காரன், "நீங்கள் வயதில் இளையவர். எனக்குத் தெரிந்த ஒருவர்முன் இவன் ஒரு கத்துக்குட்டி. அவர் குரு என்னைவிடவும் வயதானவர். அவர் மலைப் பள்ளத்தாக்கில் உள்ள ஒரு குகையில் வசிக்கிறார். இவனை நீங்கள் சிறப்பானவன் என்று அறிவிப்பதற்கு முன்னால் இவன் போய் அவரை சந்தித்துவிட்டு வரட்டும். அவரைப் பார்ப்பது மட்டுமே போதும். போட்டி என்பது தேவையேயில்லை" என்றான் வேலைக்காரன்.

இதைக்கேட்டு அந்த வில்வீரன் மலையில் மைல்கணக்கில் சென்று இறுதியில் அந்த குகையை கண்டு பிடித்தான். அங்கே அவரைப் பார்த்தவுடன் அவன் சிரித்தான். ஏனெனில், அவருக்கு மிகவும் வயதாகியிருந்தது.

மேலும், அந்த குகையில் அம்பும் இல்லை, வில்லும் இல்லை. 'என்ன விதமான வில்லாளன் இவர்?' என்று நினைத்தவாரே, "அரசர் உங்களை சந்திக்க என்னை அனுப்பினார்" என்று கூறினான். அந்த குரு, 'அரசரிடமிருந்து எனக்கு தகவல் வந்தது. ஆனால், உனக்கு ஒரு சிறிய பரிசோதனை செய்த பின்புதான் எதையும் முடிவு செய்ய முடியும். என்னோடு வெளியே வா' என்றார்.

குரு அந்த இளைஞனை தன்னுடன் அழைத்துக் கொண்டு குகையை விட்டு வெளியே வந்தார். "நீ உன்னுடைய அம்பையும் வில்லையும் உன்னுடன் எடுத்துக் கொண்டு வரும்போதே நீ கத்துக்குட்டி என்று கண்டேன். ஏனெனில், சிறந்த வில்லாளனுக்கு எதுவும் தேவையில்லை. ஒருவர் தனது திறமையின் இறுதி நிலையை எட்டும்போது அவர் வில்லாளனாக இருந்தால் தனது வில்லையும் அம்பையும் வீசி விடுவார், அவர் இசைக் கலைஞனாக இருந்தால் தனது இசைக் கருவியை வீசியெறிந்து விடுவார் என்ற மூதுரையை கேள்விப்பட்டதில்லையா?" என்று கேட்டார். அதற்கு அவன், "கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் புரிந்ததில்லை" என்றான். "இப்போது நீ புரிந்து கொள்ளக் கூடிய இடத்திற்குத்தான் வந்திருக்கிறாய். என்னுடன் வா" என்றார் குரு.

அங்கே ஒரு பாறை ஒரு இடத்தில் மிகவும் வெளியே நீட்டிக்கொண்டிருந்தது. அதன் கீழே ஆயிரக்கணக்கான அடிகள் ஆழமான கிடுகிடு பள்ளம். கீழே விழுந்தால் எலும்பு கூட மிஞ்சாது. உயிர் வாழ வாய்ப்பே இல்லை. அந்த அளவு அபாயகரமான பள்ளத்தாக்கு. அந்த பாறைக்குச் சென்றார் குரு. இளைஞனை பயமும் நடுக்கமும் பற்றிக் கொண்டது. அவன் அந்த பாறைக்கு கூட செல்லவில்லை. குரு, "நடுக்கத்தை நிறுத்து. இது வில்லாளனுக்கு அழகல்ல" என்றார். மேலும் அந்த குரு பாறையின் முனைக்கு சென்றார். பாறையின் நுனியில் பாதி பாதம் வெளியே இருக்குமாறு நின்றார். அங்கே இருந்தவாறே இளைஞனை, "வந்து என் அருகில் நில்" என்று அழைத்தார்.

இளைஞன் ஒரு அடி எடுத்து வைத்தான், இராண்டாவது அடி எடுத்து வைத்தான். பின் கிழே படுத்து விட்டான். நடுங்கி வியர்த்து விருவிருத்து வெலவெலத்துப் போனான். "என்னை மன்னித்து விடுங்கள். என்னால் நீங்கள் நிற்கும் இடத்திற்கு வர முடியாது. ஒரு சிறிது தப்படி எடுத்து வைத்தாலும், ஒரு காற்று பலமாக அடித்தாலும், ஒரு வினாடி மறந்து விட்டாலும்போதும்

நாம் முடிந்தோம். நான் உங்களை இங்கே பார்க்கத்தான் வந்தேனே தவிர தற்கொலை செய்து கொள்ள வரவில்லை. நீங்கள் அங்கு நிற்கிறீர்கள் என்பதையே என்னால் நம்பமுடியவில்லை" என்றான்.

அதற்கு குரு, "வித்தை ஒரு மனிதனுக்கு தருவது அசையாத உள்ளம், நான் என்கிற உணர்வு கடந்த ஆழமான மௌனம்" என்றார்.

நீங்கள் இசையை கேட்கும்போதும் உண்மையிலேயே உங்களது இதயத்தை தொடுவது அந்த ஒலி அல்ல, அந்த இரண்டு ஒலிகளுக்கும் இடையே இருக்கும் மௌனம்தான், இடைவெளிதான். அந்த மௌனத்தை உங்களது இதயத்துக்கு கொண்டு வருவது எப்படி என்பதுதான் இசையெனும் கலையே. ஆனால், ஒரு மனிதன் அந்த மௌனத்தை தன்னுடைய இருப்பில் கொண்டு வர முடிந்தால், அப்போது அவன் ஆழமான மௌனத்தில் ஆழ்கிறான். அப்போது இசை என்று நாம் இதுவரை நினைத்துக் கொண்டிருந்தது ஆரம்ப பாடம் என்பது புரியும். இதுவே நடனத்திற்கும் பொருந்தும். மற்றும் எல்லா படைப்புத் திறன் கொண்ட கலைகளுக்கும் பொருந்தும். தோன்றும் எதுவும் உண்மையல்ல. அது ஒரு கருவி. அதன் மூலம் மறைந்திருக்கும், அறியாத ஒன்றைப் பற்றி விழிப்பு கொள்ளலாம்.

ஒவ்வொரு படைப்புக் கலையும் நம்மை நம் உள்மையத்திற்கு அதாவது, எங்கே அமைதியும் மௌனமும் சாந்தமும் உள்ளதோ அங்கே கொண்டு சேர்க்கும். ஆனால், இந்த மௌனத்தை அடைய தடையாயிருப்பது நம் அகங்காரமே.

இந்த அகங்காரத்தின் தன்மைகளை நாம் உணர்ந்து கொள்ள தாயுமான சுவாமிகள் மௌனகுரு வணக்கம் என்ற தலைப்பில் அருளியுள்ளதைக் காண்போம்.

அகங்காரம் எனும் வேடரை ஒத்த கொடிய பேயானது, பாழாகிய (அனாதி மலமாகிய) ஆணவத்தைப் பார்க்கிலும் வலிமையுடையது.

அது அறிவை மயக்கும். நடுநிலைமையை உணரவொட்டாது தடுக்கும்.

யாதொரு பொருளைப் பற்றினாலும் அதுவாகவே நின்று வாதிடும்.

மும்மூர்த்திகள் முதலியவர்களோடு தான் சமமானவன் என்று செல்லும்.

தேரின் அச்சாணிபோல் தன்னிடத்தினின்றும் அசையாமல் இருக்கும்.

அந்தகாரமாகிய இருள் வடிவினன். ஆகையால் அடிமையாகிய நான் நீங்கி நில்லாமல் இத்துடன் எந்நேரமும் போராட முடியாது என்று தன் மௌன குருவிடம் விண்ணப்பிக்கின்றார்.

# மகாமந்திர மகிமை

அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே - திருஅருட்பா

**அ**ருளாகிய சபையில் திருநடம் புரியக்கூடிய அருட்பெருஞ்ஜோதி இறைவனது திருநாமத்தை சொல்வதால் நமக்கு எல்லா சித்திகளும் உண்டாகும் என்பதே இத்திருவருட்பா வரிகள் நமக்கு உணர்த்தும் உண்மை. இறைவனது திருநாமத்திற்கும், அந்த நாமத்தை உடைய இறைவனுக்கும் யாதொரு வேற்றுமையும் கிடையாது. ஆகவே, இறைவனையோ, திருநாமத்தையோ இரண்டில் எதைச் சிந்தித்தாலும் ஒன்றுதான்.

ஆழ்ந்த உறக்கத்தில் புலன்கள் அனைத்தும் மனத்திலும், மனம் புத்தியிலும், புத்தி அஹங்காரத்திலும், அஹங்காரம் அஞ்ஞானத்திலும் ஒடுங்கி விடுகின்றன. அதாவது, உறக்கத்தில் அஹம்பாவத்தின் தோற்றம் இருப்பதில்லை. ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழித்தெழுந்தவுடனே முதன்முதலில் 'நான்' என்ற அஹம்பாவம் தோன்றுகிறது. பிறகு தேசம், காலம், சூழ்நிலை முதலியன அறியப்படுகிறது. ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் ஒருவனைப் பெயரிட்டழைத்தால், அவன் உடனே விழிக்கிறான். அதாவது, அஞ்ஞானத்தில் அனைத்தும் ஒடுங்கப் பெற்ற நிலையில் இருக்கும்போதுகூட, அவன் பெயரைச் சொன்னதும், அது அந்த ஆழ்நிலை வரையிலும் செல்லும் திறனுள்ளதாக இருக்கிறது. அதாவது, சப்தத்திற்கு அத்தகைய அற்புத சக்தி இருக்கிறது. அஞ்ஞானத்தை உடைத்து அகம் என்பதுவரை எட்டிவிடுகிறது.

இவ்விதமே தொன்றுதொட்டு உலகில் ஆசை வயப்பட்ட மனிதன் ஒருவன், குருமுகமாக உபதேசம் கேட்டு தனது உண்மை உருவை அறிகிறான். அதாவது, குருவின் உபதேசமான சப்தம், அஞ்ஞானத்தில் மூழ்கிக் கிடக்கும் மனிதனுக்கும் தத்துவ ஞானத்தை அளிக்கிறது. சப்தத்தின் சக்தி அபாரமானது. புலன்களுக்கு எட்டாத நிலையையும் அது அடைவிக்கிறதல்லவா!

"நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப" என்ற தொல்காப்பியரின் வாக்கிற்கிணங்க தத்துவமறிந்த ஜீவன்முக்த மகா புருஷனிடமிருந்து வெளிவரும்

மந்திர உபதேசத்தை, யாரொருவர் ஆர்வத்துடனும் விடாமுயற்சியுடனும் ஜெபிக்கிறானோ, அப்படி ஜெபிப்பவனுக்கு அவனுடைய வினைகளெல்லாம் நீங்கி, அஞ்ஞானம் அழிந்து, ஆத்மஞானத்தை அடைகிறான்.

**வள்ளால் உன்னைப் பாடப்பாட வாய்மணக்குதே**
**வஞ்ச வினைகள் எனைவிட்டோடித் தலைவணக்குதே**
**எள்ளாதுனது புகழைக் கேட்கச் செவி நயக்குதே**
**எந்தாய் தயவை எண்ணும்தோறும் உளம் வியக்குதே** என்ற திருஅருட்பா வரிகள் இங்கு கருதற்குரியது.

***திருநாமம் என்பது வெறும் சொல்தானே?*** என்ற ஐயம் நமக்குள் எழலாம். ஆனால், வெறும் சொல்லுக்கே அளவற்ற சக்தி உள்ளபோது இறைவனின் நாமத்திற்கு, அந்நாமத்தைச் சொல்பவருக்கு இறைவனுடன் சம்பந்தம் ஏற்படுத்தும் சிறப்பான சக்தி உள்ளது. ஆகையால், இறைவன்திருநாமத்தை பக்தி சிரத்தையுடன் உச்சரிப்பதால் விரைவில் பலனைத் தருகிறது.

**வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில்**
**ஒருமொழியே என்னையும் என்உடையனையும் ஒன்றுவித்துத்**
**தருமொழியாம் என்னில் இனிச் சாதகமேன் சஞ்சலமேன்**

என்ற திருஅருட்பா வரிகள் மெய்மையே விளையும் சொற்களைப் பேசும் மாணிக்கவாசகப் பெருமானே! உன் திருவாசகத்தில் ஒரு வாசகமே என்னையும் என்னை உடையவனான இறைவனையும் ஒன்றுவித்து அருளும் உபதேச மொழியாகும் என்றால், இறைப் பேறு குறித்து வேறு சாதனங்களை நாட வேண்டாம். அவை குறித்து வருந்த வேண்டாம் என்கிறது.

**பக்தி சிரத்தையுடன் திருநாமத்தை நினைப்பவர், பிறப்பு இறப்பாகிய பெருங்கடலை, பசுவின் குளம்படி நீரைத் தாண்டுவது போல எளிதில் கடந்துவிடுவார்.**

***பக்தி சிரத்தையுடன் திருநாமத்தை உச்சரியாவிட்டால் பலன் ஏற்படாதோ எனில்,*** நாம ஜபத்தில் சிரத்தை குறைவாக இருந்தபொழுதிலும் ஜபத்திலிருந்து பலன் அவசியம் உண்டாகும். ஆனால், எப்போது உண்டாகுமென்கிற நிச்சயம் இல்லை. சிரத்தையுடன் செய்யப்படும் நாம ஜபத்தின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற போது **நினையாமல் நினைக்கும் நிலை** ஏற்படும்.

**பத்தி நெறியில் செழித்தே அன்பில்**
**பாடும்மெய் அன்பர் பதியில் பழுத்தே**
**தித்தித்து இருப்பது பாரீர்**
**திருச்சிற்றம்பலத்தே திருநட ஜோதி**

என்ற திருஅருட்பா, இறைவன் மீது உண்மையான அன்பு கொண்டு வாழும் மெய்யன்பர் உள்ளத்தில் இறைவன் ஓங்கி பழுத்து இனிக்கின்றார் என்கிறது.

***ஆர்வம் மற்றும் உறுதியான நம்பிக்கையுடன் செய்யப்படும் நாம ஜபத்தால்தான் பலன் ஏற்படும் என்றால் நாமத்திற்கு மகிமை இல்லையென்று ஆகிவிடுகிறதே? சிரத்தைக்கும் விசுவாசத்திற்குமே பெருமை கூறுவதாக ஆகிவிடுமன்றோ? என்பது சரிதான். இருப்பினும் அப்படியன்று.***

ஓர் அரசனை அரசனாக அறியாதபோது, அரசனிடமிருந்து அடையக்கூடிய பயன் எதுவும் கிட்டாது. அரசனை, அரசன் என்று அறியாமல் பார்த்தாலும், அரசனது பெருமை சிறிதும் குறையப் போவதில்லை. ஆனால், பார்ப்பவனது இலாபத்திற்கே குறைவு வருகிறது. அவ்விதம் நாமத்தில் சிரத்தை மற்றும் விசுவாசம் இல்லாவிட்டால், அத்தகையவனுக்கு நாமத்தால் ஏற்படக்கூடிய இலாபம் தடைப்படும். இதனால், நாம மகிமைக்கு எந்தக் குறைவும் வருவதில்லை. நம்பிக்கை இல்லாதவனுக்கே குறைவு ஏற்படுகிறது.

***திருநாமத்தை உச்சரிப்பது ஒரு செயலா எனில்,*** திருநாமத்தை உச்சரிப்பதென்பது ஒரு செயல் அல்ல. அது ஓர் உபாசனை. ஏனெனில், நாம ஜபத்தில் ஜெபிப்பவருடைய இலட்சியம் இறைவனைக் குறித்து இருக்கிறது. மேலும், இறைவனையே இலட்சியமாகக் கொண்டிருப்பதால் நாமம் சின்மயமாகிறது. அது மட்டிலுமல்ல, அந்த சின்மயத் தன்மையானது ஜெபிப்பவரிடத்திலும் பிரகடனமாகிறது. அதாவது, நாம ஜபம் செய்பவரது சரீரம்கூட சின்மயமாகிறது. அவரது சரீரத்தின் ஜடத்தன்மையும் அழிந்து விடுகிறது. **“உலகமெலாம் போற்ற ஒளிவடிவனாகி இலக அருள் செய்தான் இசைந்தே”** என்ற திருஅருட்பா வரிகளே இதற்குச் சான்று.

***நாமங்களைத் திரும்பத் திரும்பச் சொல்வது எதற்கு எனில்,*** திரும்பத் திரும்ப செய்து வந்தால்தான் உருக்கத்தோடு நாம கீர்த்தனம் செய்யும் நிலைமை வரும்.

பழுதடைந்த இயந்திரத்தைப் பலமுறை முயன்று இயக்குவது போலத்தான் இதுவும். நான்கைந்து முயற்சிகளில் இயந்திரம் வேலை செய்யலாம். மேலும், பல முறை முயன்று இயந்திரத்தை இயக்க வேண்டி இருக்கலாம். ஆகவே, பலமுறை நாம ஜபம் செய்ய வேண்டியது அவசியம்.

***நாம ஜபம் செய்பவனும் தீயசெயல்களைச் செய்கிறானே? அவன் திருந்துவானா? திருந்த மாட்டானா என்றால்,*** முதலில் ஒரு உண்மையை புரிந்து கொள்ள வேண்டும். இறைவனை அடைந்தே ஆகவேண்டும் என்ற இலட்சியமில்லாதவனே பாவ காரியங்களைச் செய்கிறான். ஆண்டவனை அடைய வேண்டும் என்ற குறிக்கோள் உள்ளவன் மூலமாக பாவகர்மங்கள் சம்பவிக்கும் என்ற பேச்சிற்கே இடமில்லை. பணத்தைக் குறிக்கோளாகக் கொண்டவன், தனது எந்தச் செயலும் பொருளீட்டுவதற்குத் தடையாக இருக்க அனுமதிக்க மாட்டான். எப்போதாவது, எதாவது ஒரு காரணத்தால் பணம் நஷ்டமானால் மிகுந்த துயரத்துடன் மூர்ச்சையாகிவிடுவான். அவ்விதமாகவே, இறைவனை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டவன், அதற்குத் தடையாகும் எந்த ஒரு செயலையும் செய்ய மாட்டான். நாம ஜபம் செய்யும் ஒருவன் தீய செயல்கள் செய்தால், அவனுக்கு இறைவனை அடைய வேண்டும் என்ற உறுதியான இலட்சியம் ஏற்படவில்லை என்று தீர்மானிக்கலாம்.

சாதகன் இறைவனை அடைவதையே உறுதியான குறிக்கோளாகக் கொண்டு நாம ஜபத்தைச் செய்து வரவேண்டும். இவ்வாறு இருப்பின் அவனிடம் பாவகர்மங்கள் சம்பவிக்காது. எப்போதாவது பாவத்தைச் செய்யும்படி நேர்ந்தால், மிகவும் பச்சாதாபம் ஏற்படும். அதனால், அவன் மறுமுறை அவ்விதம் ஒருபோதும் செய்யத் துணியமாட்டான்.

***யாருக்கு பாவம் மிகுதியாக இருக்கிறதோ, அவர் இறைவன் நாமத்தைக் கூற முடியாமல் ஆகிவிடுகிறது. அவர் இறைவன் நாமத்திற்கு எவ்விதம் தகுதி பெறுகிறார்?***

**புல்லவரே பொய்உலக போகம் உற விழைவார்; புண்ணியரே சிவபோகம் பொருந்துதற்கு விழைவார்** என்ற திருஅருட்பா வாக்கிற்கிணங்க யாருக்குப் புண்ணியம் குறைவாக இருக்கிறதோ, அவருக்கு பக்தர்களிடத்திலும், பக்தியிலும், இறைவன் நாமத்திலும் சிரத்தை ஏற்படுவதில்லை.

*பித்தம் அதிகரித்த நோயாளிக்குக் கல்கண்டு கூடக் கசப்பாக இருக்கும். ஆனால், அதைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் பித்தம் குறைந்து, இனிக்கத் துவங்கும். அவ்விதமே பாவம் அதிகமாக இருப்பதால் நாமம் சொல்ல முடியாமல் தடை ஏற்படும். ஆனால், நாம ஜபம் செய்வதை எப்படியாவது துவங்கிவிட்டால், உடனே பாவம் அழிந்து இறைவனது நாமத்தில் ருசியும் இனிமையும் ஏற்பட்டு, நாம ஜபத்தின் பயனையும் கண்கூடாக அறிய இயலும்.*

**சிவசிவ என்கிலர் தீவினையாளர்**
**சிவசிவ என்றிட தீவினை மாளும்**
**சிவசிவ என்றிட தேவரும் ஆவர்**
**சிவசிவ என்றிட சிவகதிதானே** *என்ற திருமந்திரம் இங்கு கருதற்குறியது.*

*இக்கரை கடந்திடில் அக்கரையே; இருப்பது சிதம்பர சர்க்கரையே என்கிறது திருஅருட்பா. இக்கரையிலிருந்து அக்கரைக்குச் செல்ல வேண்டுமாகில் ஒரு படகு வேண்டும். அதைச் செலுத்த இரு துடுப்புகளும் வேண்டும். அவ்விதம் ஞானம், வைராக்கியம் என்ற இரு துடுப்புகளைக் கொண்டு நாம ஜபம் எனும் படகில் ஏறி பயணித்தால் பிறவியாகியக் கடலைக் கடந்து தேனென இனிக்கும் பரம்பொருளை அடைந்து பேரின்பத்தில் மூழ்கித் திளைப்பது உறுதி.*

**நம்மைப்**
**பெற்ற தாயைப் பார்க்கிலும்**
**அனந்தங்கோடிப் பங்கு நம்மீது தயவுள்ளவன்**
**நமது ஆண்டவன். ஆதலால் நமக்க ஒரு காலத்திலும்**
**குறைவு நேரிடாது. இது சத்தியம். ஆனால் நாம்**
**நம்பிக்கை தவறாது இருக்க வேண்டும்.**
**- வள்ளலார்**

**திருச்சிற்றம்பலம்**

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# கடந்த முறை (ஜூலை 20, 21 & 22) நடைபெற்ற பஞ்ச சுத்தி கிரியா முகாமில் கலந்துகொண்ட ஒரு அன்பரின் அனுபவம்





"அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வணக்கம்! இந்த முகாமில் நான் முதன் முறையாகக் கலந்துகொள்கிறேன்.

பேஸ்ட் பதிலாக பற்பொடி. பித்தநீர் வெளியேற்றுதல் போன்ற முறைகள் சற்று கடின மாக இருந்தது. ஆனால் பலன் மிகவும் வியப்பாக இருந்தது! கண், காது, மூக்குகளில் எண்ணெய் ஊற்றும் போது பயமாக இருந்தது. ஆனால் நானே கழிவுநீர் வெளியேறுவதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தேன். அதிலும் கண்களில் ஊற்றும் போது கண் ஓரே எரிச்சல், பின் கண்ணாடியில் என் கண்ணை பார்த்தபோது அதில் உள்ள மஞ்சள் நிற அழுக்கு காணாமல் போய்விட்டதை உணர்ந்தேன்!

என் வீட்டில் எவ்வளவு சுதந்திரத்தை உணர்ந்தேனோ அதைப் போல உணர்ந்தேன். யோகாசனம் செய்யும் போது உடல் நடுங்கியது. என் உடல் பிரச்சனை எனக்குப் புரிந்தது. சூரியநமஸ்காரம் செய்வதற்கு என் உடல் நன்றாக வளைந்தது. உடல் லேசானது போல் இருந்தது.

பாராயணம் என் மனதை உருக்கிக் கண்ணீர் வரச் செய்தது. யோகாசனம் என் வீட்டில் செய்ய முயற்சிப்பேன், நிச்சயம் செய்வேன்.

அர்ப்பணிப்பு உணர்வுடன் அளித்த உணவை வீட்டில் கூட இவ்வளவு சுவையாக உண்டதில்லை.

இதற்கு முன் ஆழ்நிலை தியான முகாம் 3 முறை வந்தும் காலையில் 4 மணிக்கு வீட்டில் எழுந்து பழகவில்லை, இனி! உறுதியாக முயல்வேன். திருவருள் துணையோடு இனி அதிக கோபம், எதற்கெடுத்தாலும் அழுகை, பயம், வெட்கம் போன்ற பழக்கங்களை கைவிட முயல்வேன்.

என் வேண்டுகோள் இதுதான், இந்த மாதிரியான முகாம்களை அடிக்கடி நடத்த வேண்டும். அதில் நாங்கள் பங்குபெற திருவருள் வேண்டும். அதுமட்டுமின்றி எங்களால் இயன்றவற்றை கொடுக்க வேண்டும். நன்றி!"

– பு.சிந்து, மதுரை.

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly August 2018, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/2018-2019
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி





## வடலூர் மாதப்பூசம்

**06.09.2018** – ஆவணி 21 – வியாழன்

**03.10.2018** – புரட்டாசி 17 – புதன்

**05.10.2018** – புரட்டாசி 19 – வெள்ளி

## திருவண்ணாமலை பௌர்ணமி கிரிவலம்



**25.08.2018** – ஆவணி 09 – சனி
அதிகாலை 02:59AM – மறுநாள் அதிகாலை 04:58AM வரை

**24.09.2018** – ஆடி 11 – திங்கள்
காலை 06.59AM – மறுநாள் காலை 08:58AM வரை

அனைவரும் அருள் பெற வருக! வருக!!

தொடர்புக்கு: 88385 40176, 63801 11475

அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே.

திரு/திருமதி

Redirect to : அருள்திரு **பாபு சாது**
**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865